Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்


THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆவணி மீ 31 உ ஞாயிற்றுக்கிழமை (16-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 25 ஓசை 210

## 20ஆம் திகதி முதல் அரிசிவிலை நிர்ணயம்

(யாழ்ப்டாணம்)

கடந்த பதின்மூன்றாம் திகதி முதல் ப. நோ. கூ. சங்கத்தாலேயே அரிசி, நெல்கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்ற வரையறை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் தளர்த்தப்பட்டுள்ள அதே வேளை யாழ். மாவட்டத்தில் அரிசிவிலை நிர்ணயமும் செய்யப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் ப.மூர்த்தி (4ஆம் பக்கம் பார்க்க)




கடந்த வியாழக்கிழமை கோட்டை முகாம் வாசலில் வைத்து விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் சலாமன் கவச ட்ரக்.

## சுடப்பட்ட விமானம் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முற்றுகையை முறியடிக்க சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட சிறிலங்கா விமானப் படைவிமானத்தின் சிலபாகங்கள்நேற்றுமுத்திரைச்சந்தைப் பகுதியில் விடுதலைப் புலிகளால் பார்வைக்கு வைக்கப் பட்டன.

அதேவேளை இவ் விமானத்தையும், அதன் விமானியின் உடலையும் சிறிலங்கா இராணுவத்தினர் மீட்டுள்ளதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



கோட்டை முற்றுகையை முறியடிக்கமுற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரிடம் இருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட கண்ணிவெடி கண்டுபிடிக்கும் இயந்திரத்துடன் போராளி ஒருவர்.

★ 20 பீரங்கி படைப் பிரிவு ★ 28 கடற்படைப் படகுகள் ★ 8 விமானங்கள்
★ 4 பீரங்கிபொருத்தப்பட்ட ஹெலிகப்டர்கள் ★ 4000 விசேடபடையினர்

# கோட்டை முற்றுகை முறியடிப்பு ராணுவ நடவடிக்கை தோல்வி

## அரசியல், இராணுவ வட்டாரங்களில் குழப்பம்

(கொழும்பு)

*யாழ். கோட்டை முற்றுகையை முறியடிக்க சிறிலங்கா இராணுவம் கடந்த வியாழக்கிழமை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவுற்றது சிறிலங்கா இராணுவ வட்டாரங்களிலும், அரசியல் வட்டாரங்களிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது.*

''யாழ். கோட்டை முற்றுகைமுறியடிப்பு'' நடவடிக்கை இதுவரை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளில்மிகவும்பெரியதாகும். இந்த இராணுவ நடவடிக்கைககாக சிறிலஙகா இராணுவத்தில் விசேட பயிற்சிபெற்ற சஜபாகுப்படைப் பிரிவு, சிங்க படைப்பிரிவு என்பனவற்றைச் சேர்ந்த 4000க்கு மேற்பட்டஇராணுவத்தினரும் 28 கடற்படைப் படகுகளும், 20பீரங்கிப்படைப் பிரிவுகளும் பயன்படுத்தப்பட்டதோடு, சிறிலங்கா விமானப்படையின் முழுப்பலமும் பிரயோகிக்கப் பட்டது.

விமானப்படைக்குச் சொந்தமான நான்கு குண்டுவீச்சு விமானங்களும், நான்கு பீரங்கி பொருத்தப்பட்ட ஹெலிகொப்ரர்களும், இரண்டு அவ்ரோ விமானங்களும், இரண்டு வை 12 ரக விமானங்களும் பயன்படுத்தப் பட்டன.

இத்தாக்குதல் தொடங்குவதற்கு முன்னதாகவேவிமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் முன்னோடித் தாக்குதல்களை யாழ். குடாநாடுஎங்கும் (4ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டைப்பகுதியை முற்றுகையிட்டிருக்கும் விடுதலைப் புலிகள், சிறிலங்கா இராணுவத்தினருக்குச் சொந்தமான ஆயுதங்கள் பலவற்றை நேற்று கைப்பற்றியுள்ளனர்.

ரி 56-1, ரவைக்கூடு 4, ரவை475, புளட்புறாஜக்கட் 1, தண்ணீர் போத்தல் 4, மில்றி பெல்ட 2, கிட்பாக் 1, ஏ. சே. கோல்சர் 1 ஆகியன கைப்பற்றப்பட்டவையாகும்.

## இரு இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலும், மயிலிட்டியிலும் பாதுகாப்பு கடமையிலீடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் இராணுவத்தினர்மீது சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டதில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

## விமானங்களில் இருந்து எரிகுண்டு; வீடுகள் பலவும் எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில் நேற்று நான்கு மணியளவில் வை. 12-ரக விமானம் ஒன்று புதுவித இரசாயன எரி குண்டுகளை மக்களின் குடியிருப்புக்களின்மீது வீசியது. இவ் விமானம் வீசிய ஏழு எரி குண்டுகளில் ஒரு குண்டு குருநகர் தொடர்மாடியை சுற்றியுள்ள குடியிருப்புக்களில் வீழ்ந்து வெடித்ததில் ஐந்து வீடுகள் தீக்கிரையாகின. மற்றுமொரு எரிகுண்டு கரையூர் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் மூன்று வீடுகள் தீக்கிரையாகின. ஏழு வீடுகள்பலத்தசேதமடைந்தன (4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் 15 வீடுகள் சேதம்

(மன்னார்)

மன்னாரில் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டதில் 15 வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

நேற்று நடைபெற்ற இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கடற்கரையை (4ஆம் பக்கம் பார்க்க)

சிலாவத்தையில்

## விமானக் குண்டு வீச்சுக்கு 10 பொதுமக்கள் பலி

(மன்னார்)

மன்னார்மாவட்டத்திலுள்ள சிலாவத்தையில் போர் விமானம் பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொண்டது.

இத்தாக்குதலின் போது 10 பொதுமக்கள் பலியானார்கள்; பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் இக்குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது.

## புலிகளின் பெயரால் லஞ்சம்; இருவருக்கு மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் பெயரை துஷ்பிரயோகம் செய்து லஞ்ச மோசடியில் ஈடுபட்டதாக இருவருக்கு நேற்றுமாலை நல்லூர் முத்திரைச்சந்தையடியில் வைத்துமரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் மக்கள் வாழ் பகுதியில் தொடர்ந்து குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள முஸ்லிம் பகுதிகளில் நேற்றுக் காலை 9 00 மணியளவில் ஒரு அவ்ரோவும், வை 12 (4ஆம் பக்கம் பார்க்க)

# அறிவித்தல்

**பயிர்ச்செய்கை - பெரும்போகம் - 1990/91**
**பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள்-**
**கிளிநொச்சி மாவட்டம்**

1951ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டத்தாலும் 1968ஆம் ஆண்டில் 48ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 32 ஆம் நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 1990/91ஆம் ஆண்டுக்கான பெரும் போகப் பயிர்ச்செய்கை பற்றிய தீர்மானங்கள் கீழே தரப்படுகிறது.

அவசரகால சட்டத்தின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க இவ்வறிவுறுத்தல்கள் அமையுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. திட்டத்தின் பெயர்கள் : இரணைமடு, அக்கராயன் புதுமுறிப்பு, கல்மடு, வன்னேரி, கரியாலை நாகபடுவான் குளங்கள்.
2. விதைக்கும் விஸ்தீரணம்: எல்லா நீர்ப்பாசனக் காணிகளும்
3. விதைக்கும் நெல் இனம்: 3-3 1/2 மாதம் 4- 4 1/2 மாதம்
4. ஆரம்ப விதைப்பு திகதி: 1. 10. 1990
5. கடைசி விதைப்பு திகதி: 31 10. 1990
6. ஆரம்ப நீர் விநியோகம்: 1.11.1990
7. கடைசி நீர் விநியோகம் : 15. 2. 1991
8. வாய்க்கால் துப்புரவு செய்தல்; 1. 10. 1990
9. வேலி அடைத்தல்: 1. 10. 1990
10. கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்: 1. 10. 1990இல் இருந்து 1. 3. 1991 வரை
11. அறுவடை செய்தல் : 1. 3. 1991

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்
கிளிநொச்சி மாவட்டம்

திகதி- 11. 9. 90

(B-1389)

## அறிவித்தல்


கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையில் கடமை புரிய விரும்பும் இளைப்பாறிய ஆர் எம்.பி. வைத்தியர் ஒருவரோ அன்றேல் எம்.பி.பி.எஸ். இறுதிப் பரிட்சை சித்திஎய்திய ஒருவரோ உடனடியாகத் தேவைப்படுகின்றார். கிளிநொச்சி அரசாங்க அதிபருடன் உடன் தொடர்பு கொள்ளவும். இதற்காக அவருக்கு நியாயமான வேதனம் வழங்கப்படும்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்

(B.1388)

# வீர அஞ்சலி

02-09-90 அன்று யாழ்- கஸ்தூரீயார் வீதியில் நடந்த விபத்தினால் வீரமரணமடைந்த



கப்டன்
**ரவி**
(மா. ரவிச்சந்திரன்
தையிட்டி)

வீரவேங்கை
**சின்ன அக்காச்சி**
(ப. தயானந்தன்
நீர்வேலி தெற்கு)

மண்ணுக்காய்ப் போராடி — அம்
மண்ணின் விடியலுக்கு முன்பே
விதையாகிவிட்டவர்களே!
உங்களைப் புதைக்கவில்லை!!
நாங்கள் விதைக்கிறோம்!!!

— நண்பர்கள்

(B.1387)

## வயிற்றோட்டத்திற்கு தடை மருந்து இல்லை

(வேலணை)

வயிற்றோட்ட நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்து வகைகள் வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் இல்லையாம்.

சென்ற வாரம் யாழ். மாவட்ட சுகாதார பணிப்பாளர் யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்க மூலம் புங்குடுதீவு வேலணை அரசினர் வைத்திய சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மருந்துகளில் வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மருந்துகளில் பற்றீரியாக் கிருமிகளைக்கட்டுப்படுத்தக் கூடிய மருந்து வகைகளையும் பனடோல் பிளைஜில் போன்ற குளிசை வகைகள் அனுப்பிவைக்கப்படவில்லை. (14)

## புங்கன்குளத்தில் வீடுகள் சேதம்

(ஈச்சமோட்டை)

கடந்த வியாழன் இரவு அவ்ரோ குண்டு வீச்சு விமானத்தில் இருந்து கொழும்புத்துறையில் 1 குண்டு போட்டதில் புங்கங்குளத்தில் உள்ள 3 வீடுகள் பலத்த சேதமாகியுள்ள வீட்டில் இருந்த 2 வயோதிபர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். கொழும்புத்துறை மேற்கு பவர் கவுஸ்சும் பலத்த சேதமாகியுள்ளது. இவ்விடத்தில் இருந்த மக்கள் பாதுகாப்பு கருதி பிள்ளையார் கோவிலில் தஞ்சம் புகுந்துள்ளனர். (43

## கிளிநொச்சியில் ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

கடந்த மூன்று நாட்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்தது. அதேவேளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுலில் இருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## பஜனை

(விசேட நிருபர்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் இன்று 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளில் அமைந்துள்ள அகதிமுகாம்களில் பஜனை நிகழ்சியை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அமைதி, சுபீட்சம் ஏற்பட வேண்டிக் காலை முதல் மாலை வரை முழுநாளும் முகாம்கள் தோறும் பஜனை நிகழ்ச்சி நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது. (21)

## கொள்வனவுப் பட்டியல் பார்வைக்கில்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் அனேக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டிய உணவுப் பங்கீட்டுப் பொருட்களுக்கான கொள்வனவுப்பட்டியல் பாவனையாளர்கள் பார்வைக்கு வைக்கப்படாது இருப்பதையிட்டு மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (24)

## அகல் விளக்காய் நீ அணையவில்லை



திலீபன்!
உலகில் மனச்சாட்சியுடையவர்கள் அனைவரையும்
உலுக்கினாய் உன் மரணத்தால் நீ!
ஆயுள் அதிகரிக்க
அட்சரக்கூடு கட்டும் எம்மினத்தில்
ஆலகால விஷத்தையே
ஆபரணமாய் அணிந்தவன் நீ!
புரட்டும் திருட்டும் செய்யும்
புரக்கிராசிமார் அரசியலிலிருந்து வேறுபட்டு
புனிதப்போர் இதுவென்று
புகழவைத்த புண்ணியவான் நீ!
''சாத்வீகத்தின் மொத்தக் குத்தகைக்காரர்கள்''
என்ற அனைவரையும்
சந்திக்கிழுத்த எங்கள்
சரித்திர நாயகன் நீ!
''நகாஸ்திரம் ஒன்று
அமிர் வைத்திருந்தார்
சாகாப் புகழ் திலீபன்
அதையும் பறித்தெடுத்தான்'' என்று
அன்றோர் அறிஞர்
அருமையாய்க் கூறிவைத்தார்
நீ அணையவில்லை
அகல்விளக்கானாய்
உன் மூச்சடங்கியபோது
முழு வெளிச்சம் போட்டாய்
அதில்
ராஜீவ்... ஜேயார்... என
எல்லோரையும் கண்டோம
எமை நாம் புரிந்தோம் உன்
வார்த்தைகள் எம்மை
வழிநடத்த நடக்கின்றோம்
வாழ்த்து நீ அந்த
வானததிலிருந்தே எம்மை?

— அருணா

## வீழ்ந்தது பொம்மர் இங்கே...

நோட்டங்கள் பார்த்தபின்னே ஓட்டங்கள் ஓடிப்-போய்
ஆட்டங்கள் ஆடிவந்த பொம்மரே - புலிக்
கூட்டங்கள் அழிப்பதே எம் நாட்டங்கள் என்று
சொல்லிப்
பூனைகள் மேல் குண்டுபோடும் வம்பரே
தேட்டங்கள் தேசிய பாதுகாப்பு நிதியை - ஒரு
வேட்டுக்குள் உனை விழுத்தி வெற்றிகொண்டு - கடல்
கூட்டுக்குள் உனைஅமிழ்த்திச் சிறைவைத்த வேங்கைகளை
பாட்டுக்குள் நான் விழுத்தப் பதங்களில்லை
ஏட்டுக்குள் அவர் பெயரை ஈழம் பொறித்து விடும்
நாளுக்கும் தூரமில்லை நெருங்குதடா - தலைவன்
கோட்டுக்குளளே நின்று போராடும் வேங்கைகளே!
பாட்டுக்கள் உங்களுக்கே படைக்கின்றேன்.

"நவாலியூரான்"

# தென்மராட்சியில் ஒரு சுகாதாரப்பரிசோதகரும்இல்லை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரிவில் மக்கள் சுகாதார நிலையைப் பேணுவதற்காக குறைந்தது நான்கு சுகாதார பரிசோததகர்கள் தேவைப்படுகின்றனர். இதே வேளையில் இங்கு ஒரு சுகாதார பரிசோதகர் கூட இல்லாமல் இருப்பது கவலைக்குரியது. எனவே எமது சாவகச்சேரி நகரசபையின் விசேட ஆணையாளர் கடைசி ஒரு சுகாதார பரிசோதகரையாவது பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தா. சிவபாதம் வேண்டுகோள் விடுத்துள்ளார். சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவினுள் சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயத்தையும் சுகாதார சிகிச்சை நிலையத்தையும் திறந்து வைத்த வைபவத்தின் போதே இந்த வேண்டுகோளை விடுத்தார். (35)

## சிந்தனைக்கு

உண்மைகளைப் புறக்கணிப்பதால், அவை உண்மைகளாய் இல்லாமல் போவதில்லை.

— ஆல்டன் ஹக்ஸ்லி


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 16-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த பெ. எண் 05


# தமிழருக்கும் மனித உரிமையுண்டா?

காணாமற் போனவர்கள் பற்றிய தகவல் அடங்கிய 533 கோப்புக்களை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் மகிந்த இராஜ பொக்சவிடம் இருந்து ஒரு உதவிப் பொலிஸ் அதிபர் பறித்தெடுத்தார். கோப்புக்கள் ஐ நா. மனித உரிமைகள் பாதுகாப்பு செயற்குழுவிடம் கையளிப்பதற்காக கொண்டு செல்லப்பட்டபோதே பறித்தெடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மேலும் அக்கோப்புக்களில் காணாமற் போனவர்கள் பற்றிய தகவல் தந்தவர்கள் பெயர்கள் உள்ளதாகவும் அதையிட்டு தான் கவலைப்படுவதாகவும் மகிந்த இராஜ பொக்ச தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து மனித உரிமை மீறல்கள் பெரியதொரு பிரச்சினையான விடயமல்ல. அவர்கள் மனித உரிமைகள் மீறல்கள் செய்வதற்கென்றே ஒரு பெரும் இராணுவத்தை வளர்த்தெடுத்து வைத்துள்ளதோடு, அதற்கென்றே மறைமுகக் கொலைகாரப் படைகளையும், குண்டர்களையும் வைத்துள்ளார்கள்.

ஜே வி.பி உறுப்பினர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் இன்றைய அரசாங்கத்தால் 1988, 1989 ஆகிய இரு ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்டார்கள் எனக் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை மனித உரிமைகள் பற்றிப் பேசிய பத்திரிகையாளர்கள் சட்டத்தரணிகள் ஆகியோரும் அரச குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டவர்களில் அடங்குவார்கள்.

மனித உரிமைகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றது என்பதை பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் ஒரு கூற்று தெளிவாக உணர்த்தும். ''மனித உரிமைகள் சங்கத்தினரிடம் இருந்துவரும் கடிதங்களில் அழகான வெளிநாட்டு முத்திரைகள் இருக்கும். அதை கிழித்து எனது மகளுக்குக் கொடுப்பேன். கடிதங்களை நான் வாசிப்பதே இல்லை. கிழித்து குப்பைக் கூடையில் போட்டுவிடுவேன்.''

அதேவேளை மகிந்த இராஜ பொக்சவும், அவாது கட்சியினரும் இலங்கையில் வாழும் தமிழர்களும் மனிதர்கள்தான். அவர்களுக்கும் மனித உரிமைகள் உண்டு அவர்களின் மனித உரிமைகள் காலத்திற்குக் காலம் மீறப்பட்டு வந்துள்ளன; வந்துகொண்டிருக்கின்றன என்பதையும் உணர வேண்டும்

கடந்த மூன்று மாதத்திற்குள்ளாகவே 3000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதோடு அவர்கள் சொந்த மண்ணில் இருந்தும் விரட்டப்பட்டுள்ளார்கள். சிறிலங்கா இராணுவத்தினால் மூன்று மாதத்திற்குள் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

சிங்கள மக்களைப் படுகொலை செய்த இராணுவத்தினரையும், மறைமுகக் கொலைகாரக் கும்பலையும் கொண்டுதான் இன்று வடக்கு கிழக்கில் அப்பாவித்தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். இது ஏன் இராஜ பொக்சவின் கண்களில் தெரிவதில்லை. அதையிட்டு ஏன் இராஜ பொக்ச குரல் எழுப்பவில்லை.

கடந்த காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக் காலத்திலும் சரி யு என் பி ஆட்சிக்காலத்திலும்சரி சிங்கள மக்களின மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. அதேபோன்று தமிழ் மக்களின் மனித உரிமைகளும் அரசாங்கங்களினால் மீறப்படடுள்ளன.

இந்நிலையில் மனித உரிமைகள் பற்றிப் பேசும் இராஜ பொக்ச தமது அரசியல் இலாபத்திற்காக மட்டும் அதைப் பேசாமல், அக்கோட்பாட்டின் உயர்ந்த இலட்சியத்திற்காக அதைப் பற்றிப் பேசுவாரா?

அதேவேளை மகிந்த இராஜ பொக்ச கோப்பில் உள்ள காணாமற் பான சிங்கள மக்கள் பற்றிய தகவல் தந்தவர்களின் பாதுகாப்பு பற்றி இன்றைய நிலையில் சிந்திப்பது நியாயம்தான்.

# சிரமம்பாராது சேவை செய்யும் வைத்திய அதிகாரி

(வேலணை)

வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலை விமானக்குண்டு, ஹெலித் தாக்குதல்களினால் பலத்த சேதமடைந்திருந்த போதும் கூட வைத்தியசாலையின் பிரதம வைத்தியஅதிகாரி அங்குவரும் பலதரப்பட்ட நோயாளிகளுக்கு இரவு பகல் என்று பாராது சேவையாற்றி வருகின்றார். அத்தோடு மூன்று தினங்களுக்கு காலை, மாலை தனது சொந்தக்கணக்கில் தேநீரையும் இலவசமாக வழங்கி உதவினார். (14)



# நாமே எமது சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியும்

யாழ் கோட்டை—

— இன்று பரபரப்பாகப் பேசப்படும் வரலாற்றுப் புகழ் பெற்ற நமது மண்ணின் அடிமைச்சின்னம்.

— தியாகமரணமடைந்த வேங்கை திலீபன் கோட்டைமுகாம் முன்னால் நிகழ்த்திய பேச்சும் புகழ் மிக்கது.

— அந்த தியாக திலீபத்தின் மூன்றாம் நினைவு நாட்களையொட்டி அப்பேச்சின் இரண்டாம் பகுதி இது.

ஏற்கனவே தலைவர் பிரபாகரன் டில்லியில் இருந்த வேளை இங்கு நான்கு நாட்கள் மக்கள மறியல் போராட்டங்களை நடத்தினார்கள்.

சர்வவல்லமை பொருந்திய இந்திய இராணுவம் வட பகுதி முகாம்களில் இருந்த வேளை முகாமில் இருந்து வெளியே ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை ஏனெனில் மக்கள் எழுச்சியுடன் போராடினால் இந்திய நாட்டு இராணுவம் எதிர்நிற்க முடியாது.

வியட்னாமைப் பொறுத்த வரை வியட்னாமிய மககள் அமெரிக்க இராணுவத்திற்கு எதிராகவே போராட்டம் நடத்தினார்கள். இந்த அடிப்படையில் நாமும் எம்மைப் பொறுத்தவரை கூறுகின்றோம் எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சி கொள்ள வேண்டும். இன்று கூட எம்மக்கள் மத்தியில் அந்த நிலை இல்லாதது எமக்கு வருத்தத்தைத் தருகின்றது. எமக்கு ஆறாத சோகத்தை ஏற்படுத்துகின்றது அந்த நிலைமை தோற்றுவிக்கபபட வேண்டும். எமது அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதற்காக நாம் எழுச்சி அடைய வேண்டும்.

இப்படி எழுச்சியுடன் நாம் போராடினால் எலரும் இப்போராட்டத்திற்கு மதிப்பளித்தேயாக வேண்டும். ஒன்றைக் கூறுகின்றேன். மக்கள் அனைவரும் முழுமையாகப் போராட்டத்திற்குத் தயாரானால் நிச்சயமாகத் தமிழீழத்தை அமைக்க முடியும். ஆனால் அந்த சூழ்நிலை இல்லாதது நமக்கு வேதனையைத் தருகின்றது. மக்களும் இணையவேண்டும் என்பதை நாம் பலஇடங்களில் வலியுறுத்திக்கூறியிருந்தோம்.

இன்று இந்தப்போராட்டத்தில் கூட எத்தனையோ ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். ஆனால் வெளியே இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அந்த நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும. நிலைமை மாற்றி அமைக்கப்படுவதன் ஊடாகத்தான் நாம் தமிழீழத்தை அமைக்க முடியும் என்று கூட நாம் கூறியிருந்தோம். இந்திய இராணுவத்திடம் ஏன் ஆயுதங்களைக் கையளித்தோம் என்ற மக்கள் முழுநாட்களும் எம்முடன் நின்றிருந்தால் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்க முடியாது காலப்போக்கில் முழு மக்களையும் அணிதிரட்டுவோம் என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு. முழுமக்களையும் அணிதிரட்டி தமிழீழப் போராட்டத்தை வென்றெடுபோம் என்ற நம்பிக்கையுண்டு.

இந்திய அரசும் இந்திய இராணுவமும் இலங்கை அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் முழுமையான மக்கள் சக்தி ஒன்றுதிரண்டால் எதுவுமே செய்ய முடியாது. அடிப்படை உரிமையை வென்றெடுக்க நாம்தான் போராட வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் நாமே எமது சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியும். இதுவோர் அடையாள மறியல் போராட்டம்தான். இதைக்கூட நாம் பெரியளவில் செய்யத் திட்டமிடவில்லை. இப்போராட்டத்திற்கு எமக்குச் சரியான தக்க பதில்கள் கிடைக்க வேண்டும். குறிப்பாகச் சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களைவிடுவிப்பதாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டார்கள். அவசரகால சட்டத்தை நீக்குவதாகவும் அங்கு குறிப்பிட்டிருந்தார்கள். இவை மட்டுமல்ல இவை போன்ற எத்தனையோ அம்சங்கள் ஒப்பந்தத்தில் உள்ளன. எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. நாம் ஒப்பந்தத்தை நிராகரிக்கின்றோம். அதேவேளை தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. சிங்கள இராணுவம் இன்னமும் இன அழிப்பை புரிந்து கொண்டுதான் உள்ளது. எமது அடிப்படை உரிமைகள் எல்லாம் படிப்படியாக நசுக்கப்பட்டு நாம் நிரந்தர அடிமைகளாவதை விரும்பவில்லை.

இக் காரணங்களுக்காகவே நாம் இப்போராட்டத்தை தொடங்கியுள்ளோம் இவற்றுக்கு சரியான தக்கபதில்கள் கிடைக்காவிட்டால் இப்போராட்டம் நிச்சயம் தொடரும் நான் மிகத்தெளிவாகக் கூறுகின்றேன் காலப்போக்கில் எமக்கு சரியான தக்க பதில்கள் கிடைக்காவிட்டால் இந்தியஇராணுவமும் இங்கிருநது நகரமுடியாத நிலை ஏற்படலாம் அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

> காலப்போககில் முழு மக்களையும் அணி திரட்டுவோம் என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு. முழு மக்களையும் அணிதிரட்டி தமிழீழப் போராட்டத்தை வென்றெடுப்போம் என்ற நமபிக்கையுண்டு.

## பெற்றோல் விலை அதிகரிப்பு

(யகார்த்தா)

இந்தோனேஸியா விற்பனை செய்யும் பெற்றோல் விலையை பீப்பாவிற்கு 8.84 டொலராக உயர்த்தியுள்ளது. வளைகுடா பிரச்சினை ஆரம்பமாகும் முன்னர் சர்வதேச சந்தையில 18 டொலராக இருந்த ஒரு பீப்பா பெற்றோல் தற்பொழுது 30 டொலருக்கு மேலாக அதிகரித்துள்ளது.

அதேவேளை பாகிஸ்தானில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நாட்டிலுள்ள பெற்றோல் நிலையஙகளை மூடுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

## மூன்று நாளில் 1500 பேர் திரும்புவார்கள்

(கொழும்பு)

மூன்று தினங்களுக்குள் குவைததில் இருந்து 1500 இலங்கையர் நாட்டிற்கு திரும்புவார்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்கா சவுதிக்கு 2100 கோடி டோலர் ஆயுத விற்பனை

(வாஷிங்டன்)

இரண்டாயிரத்தி நூறு கோடி அமெரிகக டொலர் பெறுமதியாக நவீன ஆயுதங்களை அமெரிக்கா சவூதி அரேபியாவிற்கு விற்பனை செய்யவுள்ளது.

ஈராக்கிடமிருந்து சவூதி அரேபியாவிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை சாக்காககவே சவூதி அரேபியாவிற்கு ஆயுதம கொடுக்கப்படுவதாக அமெரிக்க பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ் ஆயுதங்களில் அதிநவீன போர்விமானங்களும், ஏவுகணை வகைகளும் அடங்குகின்றன.

வளைகுடாப் பிரச்சினை ஆரம்பித்தபின் எகிப்திற்கும் பெரும்பாலான நவீன ஆயுதங்களை அமெரிக்கா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவ சர்வதேச நிதியம் – குஜ்ரால்

(பெல்கிரேட்)

ஈராக் மீதான பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்ட மூன்றாம் உலக நாடுகளுக்கு பொருளாதார உதவி வழங்குவதற்காக சர்வதேச நிதியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ கே குஜ்ரால் பெல்கிரேட்டில் தெரிவித்தார்.

ஈராக்கிலும். குவைத்திலும் சிககியுள்ள வெளிநாட்டவர்களுக்கு உணவு வழங்க அனுமதி வழங்கியதற்கு ஐ நாவிற்கு நன்றி தெரிவித்த குஜ்ரால், குவைத் பிரச்சினை சமாதான வழியில் தீர்க்க ஐ நா எடுக்கும் முயற்சிக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்கள் மீது சிறிலங்கா விமானப்படை துப்பாக்கி பிரயோகம்

(சென்னை)

இந்தியமீனவர்கள்மீது நேற்றுச் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று மீனவர்கள் கொல்லப்பட்டதோடு பதினெட்டுமீனவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் தற்பொழுது இராமேஸ்வரம்ஆஸ்ப்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாகத் தெரிய வருவதாவது;

இராமேஸ்வரக் கடற்கரையிலிருந்து 17 கிலோ மீற்றர் தெற்கே 100 படகுகளில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர் மீது சிறிலங்கா விமானப்படை விமானங்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்த தாகச்செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சிறிலங்கா கப்பற் படையினர் பத்து இந்திய மீன்பிடிப்படகுகளையும் பறித்துச் சென்றதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## குருநகர்பகுதியில் துர்நாற்றம்

(குருநகர்)

குருநகர், பாஷையூர்' குருசோவீதிகளில் விமானத் தாக்குதலினால் இறந்த கால்நடைகள், வீட்டுப்பிராணிகள் என்பவற்றில் இருந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கின்றது. இப்பகுதியில் விமான, ஷெல் தாக்குதலினால் மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

சிலஇறந்த வீட்டுப் பிராணிகளை உயிருடன்இருக்கும் வீட்டுப்பிராணிகள் உணவாகக் கொள்ளுகின்றன. (றெ)

## மண்டைதீவில்200பொதுமக்கள் இராணுவத்தால் கோலை

(வேலணை)

அல்லைப்பிட்டி மண்டைதீவில் நிலை கொண்டுள்ள ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் 8 வட்டாரங்களைக் கொண்ட மண்டைதீவுப் பகுதியில் 200க்கு மேற்பட்ட பொதுமக்களைக் கொலை செய்துள்ளதாகவும் அவற்றில் 44 சடலங்களை மண்டைதீவில் உள்ள குடி தண்ணீர் கிணறு ஒன்றுக்குள் போட்டு அருகாமையில் இருந்த எருக்கும்பங்களையும் பணயக் கைதிகள் மூலம் அக் கிணற்றுக்குள் அள்ளிக்கொட்டி மூடியது மட்டுமல்லாமல் வண்டில் ஒன்றை நொருக்கி அக்கிணற்றில் போட்டுள்ளனர் எனத் தப்பி வந்த பணயக் கைதி ஒருவர் தெரிவித்தார். (14)

## பரவலான ஹெலித்தாக்கு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்ரர்கள் நேற்றுபகலில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. நாவற்குழி, நல்லூர், முத்திரைச் சந்தைப்பகுதி, பாஷையூர், துண்டி, மணியந்தோட்டம் ஆகிய பகுதிகளிலும் தாக்குதலை மேற் கொண்டன.

முத்திரைச்சந்தைப்பகுதியில் பெருமளவில் மக்கள் கூடியிருந்தபோதுஇக்ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## திருட்டு பிடிபட்டது; நகைகள் மீட்பு

(நெல்லியடி)

கரவெட்டியில் கடந்த 13 ஆம் திகதி உணவுப் பொருட்களை வாங்குவதற்காக கோவிற் சந்தைக்கு சென்ற நபர் ஒருவர் தான்கொண்டுவந்த நகைகளை ஒரு பைக்குள் போட்டு சைக்கிளில் கொழுவிவிட்டு பொருட்களை வாங்கியிருக்கிறார். இதைக் கவனித்த கள்ளன் சைக்கிளுடன் நகையையும் களவாடிச் சென்றுள்ளான். இதை அறிந்த விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் தீவிர தேடுதலின் பின், மறுநாள் கள்ளனைப் பிடித்தனர். அவர்களால்மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் திருடன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

அவனது வீட்டில் புதைத்து மாட்டுச் சாணத்தால் மெழுகப்பட்ட குழியிலிருந்து நகைகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட நகைகளின் விபரம் தாலிக்கொடிகள் 2, காப்புகள் 9'சங்கிலிகள் 3.

## ஹெலி தாக்குதலால் இருவர் மரணம்

சாவகச்சேரிப் பகுதியில் ஹெலி மேற்கொண்ட பாரிய தாக்குதலின் காரணமாக வயல் வெளியில் நின்று வயல் விதைப்பு வேலைகளை மேற்கொண்டிருந்த ஒரு வயோதிபர் மரணமடைந்தார். அதே வயல் வெளியில் நின்ற பலர் காயமடைந்தனர். இந்தப் பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இதே ஹெலி தாக்குதலைத் தொடர்ந்து சாவகச்சேரி நகரப்பகுதியில் நின்று கொண்டிருந்த ஒருவர் ஏக்கத்தால் மரணமடைந்தார். அவர் ஒரு இருதய நோயாளி என்றும் தெரியவருகிறது. (35)

### விமானங்களில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகுதி ஐந்து எரிகுண்டுகள் யாழ். கோட்டையை சுற்றியுள்ள பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. அப்பகுதிகளில் மக்கள் இல்லாத காரணத்தால் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. பொருட்சேதங்கள் பற்றித் தெரியவில்லை.

அதேவேளைவிமானம்குண்டுகளை வீசிவிட்டுச் சென்றசற்று நேரத்தில் வந்த இரண்டு அவ்ரோவிமானங்கள் வானில் வட்டமிட்டவாறு கோட்டை இராணுவத்தினருக்கு பொதிகளை வானில் இருந்து வீசின.

### 20ஆம் திகதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி தனியாரும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அரிசி, நெல் கொள்வனவு செய்யலாம் எனவும் விற்பனை செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை 20. 9 90இல் இருந்து நாட்டரிசி 25.00 ரூபாவாகவும் திட்டல் பச்சைஅரிசி 25.00 ரூபாவாகவும், சிவப்பு பச்சை அரிசி 23 00 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முஸ்லிம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரக விமானமும் மாறி மாறி பீப்பாக் குண்டுகளை வீசிய வண்ணம் வானத்தில் வட்டமிட்டன.

இவ் விமானங்கள் வீசிய குண்டுகளில் கொட்டடி லைடன் சந்தியில் நான்கு பீப்பாக் குண்டுகள் ஒரே இடத்தில் விழுந்து வெடித்ததில் இருபது வீடுகள் தரைமட்டமாகின. சில குண்டுகள் முஸ்லிம் பகுதிகளிலுள்ள கற்குளம் என்னும் இடத்தில் விழுந்து வெடித்ததில் பதின்மூன்று வீடுகள் நாசமாகின.

### மன்னாரில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்டியுள்ள கிராம மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

### புலிகளின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் (முழுநேர உறுப்பினராயிருந்து) செயலாற்றிய குருமாஸ்டர் என்றழைக்கப்படும் நடராசா சண்முகநாதன் என்பவருக்கும், புலிகள் அமைப்பின் உறுப்பினராக இல்லாதிருந்தும் இயக்கத்தின் பெயரால் மோசடிகள் பல செய்த வசந்தலோஜனாதேவி என்பவருக்கும் அவர்களது சமூகவிரோத குற்றங்களுக்காக நேற்று மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இதற்கான உத்தரவைத் தமிழீழ விடுதலைப்புலிகள் மத்தியகுழு பிறப்பித்திருந்தது.

பயிற்றப்பட்ட ஆசிரியரான நடராசா சண்முகநாதனுக்கு இயக்கம் சூட்டியபெயர் ''குருமாஸ்டர்'' இவரை நாதன் மாஸ்டர் என்ம் அழைப்பதுண்டு. திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாணத்தில் பிறவுண் றோட்டில் வசித்துவந்தார்.


குரு மாஸ்ரரின் மொத்த லஞ்ச விபரம் வருமாறு:

யாழ்ப்பாணத்தில் தொழில் செய்யும் மூன்று முக்கிய நபர்களிடம் மொததம் ரூபா 76, 000 ரொக்கப் பணம் லஞ்சமாகப் பெற்றுள்ளார். ஒவ்வொருவரிட மும்முறையே 50, 000, 10, 000, 16, 000 பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. ரொக்கப்பணத்தை லஞ்சமாக பெற்றுக் கொண்டதைவிட 3 1/2 பவுண் தங்கச் சங்கிலி ஒன்றையும் லஞ்சமாகப்பெற்றுள்ளார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட சி. வசந்தலோஜனா தேவி(வயது 34) என்ற பெண்ணின் வேறு பெயர் வசந்தா. புத்தூரில் நவக்கிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட வசந்தா அங்கேயே வசித்து வந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைச் சொல்லி வசந்தலோஜனாதேவி மொத்தம் ரூபா 94, 000 லஞ்சமாகப் பெற்றுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.




## கப்டன் ஹீரோராஜ் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவிலிருந்து நேற்று ஏவிவிடப்பட்ட ஷெல் தாக்குதலால் விடுதலைப் புலிகளின் போராளியான கப்டன் ஹீரோராஜ் (ச. பிரபாகரன், அச்செழு, நீர்வேலி) வீரமரணமடைந்தார்.

குடும்பத்தில் ஒரே மகனான ஹீரோராஜ் தகப்பனாரால் இயக்கத்தில் சேர்க்கப்பட்டவராவார். அவருக்கு இரு சகோதரிகள் உள்ளனர்.

வீரமரணமடைந்த ஹீரோராஜ்ஜின் புகழுடல் அச்செழுவிலுள்ள அவரது இல்லத்தில அஞ்சலிக்காக வைக்கப்பட்டு உள்ளது. அதன்பின்னர் இன்று பிற்பகல் 2 மணியளவில் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அச்செழு ஒற்றைப்பனையடி வாசிகசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அங்கிருந்து மாலை 4 மணியளவில் புகழுடல் அச்செழு மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீயுடன் சங்கமமாகும்.

## ரவி வீரமரணம்

(மன்னார்)

தலைமன்னாரில்விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையேநேற்றுமுன்தினம் இடம்பெற்ற நேரடி மோதலில் படுகாயமடைந்த போராளியான ரவி என்பவர் நேற்று வீரமரணமடைந்தார்.

## சைலன் வீரமரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சின்னவத்தை என்னுமிடத்தில் ரோந்து சுற்றிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்கியதில் இராணுவத்தினர் தரப்பில் பாரிய இழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் தரப்பில் போராளியான சைலன் (கோயிற் போரதீவு) என்பவர் வீரமரணம் அடைந்தார்.

கடந்த 13ஆம் திகதி இச்சம்பவம் இடம் பெற்றது.

## சிறீராம் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டை முகாமிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் போராளியான சிறீராம் (நந்தகுமார் - திருமலை) என்பவர் வீரமரணமடைந்தார்.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது.

## வைத்தியர்கள் வரவின்மையால் நோயாளிகள் அவதி

(ஈச்சமோட்டை)

தற்பொழுது கொழும்புத்துறையில் உள்ள யோகசுவாமி ஆச்சிரமத்தில் தற்காலிகமாக இயங்கும் குருநகர் அரசினர் வைத்தியசாலையில் உள்ள டாக்டர்கள் வேலைக்கு சமுகந்தராததால் அங்கு வரும் நோயாளிகள் அவதிப்படுவதாகவும் தற்பொழுது கொழும்புத்துறை கிராமத்தில் இடம் பெயர்ந்து ஏராளமான அகதிகள் எதுவித சுகாதார வசதியின்மையால் நோய்வாய்ப்பட்டுதவிப்பதாகவும் ஆனால் இந்த வைத்தியசாலையில் ஊழியர்கள் மட்டும் சமுகந்தரும் இவ்வேளையில் டாக்டர்கள் வேலைக்கு வராமல் இருப்பது பலரையும் ஆச்சரியபபடுத்துவதாக நோயாளி ஒருவர் மிக கவலையுடன் தெரிவித்துள்ளார். (43)

### கோட்டை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டன. கடற்படை பீரங்கிப் படகுகளும் சிலதினங்களுக்கு முன்னரே தாக்குதலை மேற்கொண்டன.

இத் தாக்குதல் கோட்டை முற்றுகையை முறியடிக்கும் இறுதித் தாக்குதலாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இத் தாக்குதல் சிறிலங்கா இராணுவத்திற்கு வெற்றியைக் கொடுக்காதது மட்டுமல்ல எதிர்பாராதபல இழப்புக்களையும் ஏற்படுத்தியது. இத் தாக்குதலில் முப்படை வீரர்களும் கொல்லப்பட்டதோடு, முப்படைப் போர்த் தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டமை பெரும் பொருளாதார நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## இருவர் படுகாயம்

பலலி இராணுவ முகாமில் இருந்து நேற்று மேற்கொள்ளப் பட்ட ஷெல் தாக்குதலினால் இருவர் காயமடைந்தனர், பலாலியில் இருந்து மயிலிட்டி நோக்கி இத் தாக்குதல் இடம் பெற்றது. இதனால் பலகட்டிடங்கள் சேதமாகின.

இத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் இ. தவம் (43), அவரது மனைவி செல்வராணி (37) ஆகியோராகும். இவர்கள் இருவரும் மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## ஷெல் பீரங்கித் தாக்குதல்

மண்டைதீவிலும், மண்டைதீவுக்கடற்பரப்பிலும் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவமும், கடற்படையும் இடைவிட்டு விட்டு நகர்மீதும் கரையோரப் பகுதிகள் மீதும் தொடர்ச்சியான ஷெல், பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணம் இருந்தன.